மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றச் சாட்டு கூடாது. அது சம்பந்தப்பட்டது நீக்கப்படுகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபோன்ற குற்றச்சாட்டு களை எழுதிக் கொடுங்கள்; அமைச்சருக்கு எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுப்பார்கள். கேள்வி நேரத்திலே அது வேண்டாம். குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் தேவையில்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : ** அப்படிப்பட்ட நிலையை அறிந்து அரசு முறையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. ஆ. நடராசன் : நான் பேசும்பொழுது அனுமதிக்க வில்லையே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பேசும்பொழுது நானும் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நான்கு பேர் எழுந்து கொண்டிருக்கும்பொழுது அவர்கள் எழுந்து கொண்டா இருந்தார்கள்? (குறுக்கீடு) அவர் எழுப்பிய விவகாரம் வேறு. நீங்கள் பேசிய விவகாரம் வேறு. நீங்கள் பொதுப்படையாகச் சொன்னீர்கள். யார் அடித்தார்கள் என்றா சொன்னீர்கள்? (குறுக்கீடு) அதையும் நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) இப்படி என் அனுமதியில்லாமல் எழுந்து பேசுவது முறையல்ல; இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினைகள் தீர்ந்து தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மட்டும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை நகரில் பாதாள சாக்கடை.

66—(* வினா எண். 8187) திரு. எ. தெய்வநாயகம் மற்றும் திரு. க. பாரமலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1987 மார்ச் 5]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். மதுரை நகரில் வைகை ஆற்றிற்குத் தெற்குப் பகுதியில் உள்ள பகுதி 9 மற்றும் 10 ஆகிய இரண்டிற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை மேம்பாடு செய்ய ரூ. 9.28 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. வாரியத்தின் தொழில் நுட்பப் பரிந்துரைகள் பெற்றபின், இத்திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதலை வழங்கும்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் வளர்ந்து, பெரிதாகிக் கொண்டே செல்கிறது. மதுரைக்குத் தென்பகுதியிலே செல்கின்ற பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்று இருக்கிறது. அது உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் திட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டமும் இதில் சேர்ந்துள்ளதா? அதற்குண்டான வாய்ப்பையும் தமிழக அரசு பரிசிலனை செய்கிறதா என்பதைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மதுரை தெற்குப் பகுதி பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்பொழுதும் இதில் இணைக்கப்படவில்லை. அது தேவையை ஈடுகட்ட முடியாமல் இருக்கிறது. ஆகவே, இப்பொழுது தனிப்பட்ட முறையிலேதான் 9—ஆம், 10—ஆம் பகுதிகளுக்குத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வர ஆய்வு இருக்கிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பகுதிகள் 9, 10, ஆகியவற்றிற்குச் சுமார் ரூ. 9 கோடியிலே திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றை எப்பொழுது நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது? வட பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையாக நிறைவேறவில்லையே, அதை எடுத்துக் கொள்கின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டம் பல பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. 9—வது பகுதியிலே ஏறக்குறைய 10 வார்டுகள் இருக்கின்றன. அதைப் போல் 10—வது பகுதியிலேயும் 5, 6 வார்டுகள் இருக்கின்றன. அவை பூராவுக்கும் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ரூ. 9.28 கோடிக்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அங்கே இப்பொழுதிருக்கிற மக்கள் தொகை 33,000 ஆகும். 2,016 ஆம் ஆண்டில் அது 66,000 பேர்களாகும் என்று கணக்கிடப்பட்டு இந்தத் திட்டம் தற்போது ஆய்வில் இருக்கிறது. அதை விரைவிலே எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, அது முடிந்த பிறகுதான் மற்ற திட்டங்கள் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.